படித்துத்திர வேண்டும். ஆகவே, தொகுதிக்குள்ளே ஒரு இடத்திலே போய் படிக்கின்றவர்கள், பக்கத்திலே இருக்கிற கல்லூரியிலே சேர்ந்து படிக்கலாம். போதுமான அளவிற்கு கல்லூரிகள் இருக்கின்றன: கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த நிலையில் இப்போது புதிதாக கல்லூரியை நன்னிலம் தொகுதியில் ஆரம்பிக்கிற திட்டம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 144, திரு. வ. மு. சுப்பிரமணியம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

144—

மணலூர் காகித மற்றும் இரசாயன ஆலைகளின் கழிவுகள்.

*1388 திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) பசும்பொன் முத்துராமலிங்கதேவர் மாவட்டம், மணலூரில் உள்ள காகித மற்றும் இரசாயன ஆலைகளின் கழிவுகள் முறையாக வெளியேற்றப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நிறுவனத்தார்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்ததைப் போல, இந்த இரசாயன மற்றும் காகித ஆலைகள், இரசாயனக் கருவிகளை அமைத்து, இரசாயனத் தன்மைகளைக் குறைப்பதற்கு எந்த ஒரு சுத்திகரிப்பு நடவடிக்கைகளும் செய்யப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதோடு, இந்த ஆலைகள் வைகை ஆற்றுப் படுகையிலே அமைந்துள்ளன. ஜனத்தொகை அதிகமாக உள்ள குடியிருப்புகள், இந்த ஆலையைச் சுற்றிலும் இருக்கின்றன. இதனால், தண்ணீர் கெட்டு, சுற்றுப்புறச் சூழ்நிலைகள் எல்லாம் மாசுபட்டு, சில கிராமங்களிலே இருக்கிற ஜனங்கள் அந்த இடத்தை

விட்டு குடிபெயரக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தால், அந்த ஆலைகளை, மக்களுடைய நலன் கருதி, வேறு இடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலைகள் அத்தனையையும் அங்கேயிருந்து வேறு இடத்திற்கு மாற்றுவது என்பது இயலாத காரியம், காரணம், ஏற்கனவே அங்கு அமைக்கப்பட்டு எல்லா வசதிகளும் ஏற்படுத்தப்பட்ட காரணத்தால் எல்லா ஆலைகளையும் அங்கேயிருந்து மாற்றுவது என்பது முடியாத காரியம். அப்படி வேறு இடத்திற்கு மாற்றுகிறபோது அங்கேயும் இதே பிரச்சினைகள் வருவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். ஆனால் அங்கே உள்ள ஆலைகளில் சுத்திகரிப்பு நிலயங்கள் ஒழுங்காக அமைத்து, ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மாசு கட்டுப்பாட்டு வாரியம் முறையாக மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்களையும் மனதில் வைத்து அதற்கேற்ப தீவிரமான நடவடிக்கையை மாசுக் கட்டுப்பாடு வாரியம் எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று ஆலை இருக்க வேண்டும், இல்லாவிட்டால் அங்கே குடியிருப்புகள் இருக்க வேண்டும். ஏதாவது ஒன்றுதான் அங்கே இருக்க முடியும். இரண்டும் இருப்பது என்பது சாத்தியப்படாது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதை ஆரம்பித்திருக்கிறபோதே யோசித்திருக்க வேண்டும். எனவே ஒரு தொழிற்சாலை என்பது அந்த முதலாளிகளை மட்டும் நாம் மனதில் வைத்துக்கொண்டு, செய்யக்கூடிய காரியம் அல்ல. அதிலே பணியாற்றக்கூடிய ஆயிரக்கணக்கான தொழிலாளிகளை நாம் மனதில் வைத்து அந்தக் காரியத்தை செய்ய வேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது. எனவேதான் அதிலேயிருந்து வெளியிலே வருகின்ற கழிவுநீரை முறையாக சுத்திகரிப்பதற்கான நடவடிக்கைகளை அந்த ஆலைகள் எடுத்துவிட்டால், இநதப் பிரச்சினையே இல்லாமல் போய்விடும் என்று நாங்கள் நம்புகிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியதற்கிணங்க மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக நாங்கள் நேரடியாக தனிக் கவனம் செலுத்தி, அதிலே நடவடிக்கை எடுப்போம் என்பதையும்

1992 மார்ச் 10]

அந்தயும் மீறி அவர்கள் செயல்பட்டால், அந்த ஆலைகளை மூடுவதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்வோம் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 145, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

145—

பேருந்து நிறுத்தங்களில் நடத்துநர்கள்.

*2894 திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் நெரிசலைத் தவிர்க்க பேருந்து நிறுத்தங்களில் நடத்துனர்களை நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பயணிகள் வழியில் காத்திருக்கும் நேரங்களை குறைத்து அவர்கள் துரித பயணத்திற்கு உதவும் வகையில் 19 பெண் பயணச் சீட்டு விற்பனையாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் போக்குவரத்து அதிகமாக இருக்கும் 47 பேருந்து நிறுத்தங்களில் பரிட்சார்த்தமாக பணி செய்கின்றனர்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே ஒரு கிலோ மீட்டருக்கு இரண்டு பஸ் ஸ்டாப்புகள் இருக்கின்றன. அந்த பஸ் ஸ்டாப்புகளிலிருந்து ஏறுகின்றவர்கள், 'பீக் அவர்ஸ்' என்று சொல்கிறார்களே, அந்த நேரங்களிலே ஏறி, டிக்கெட் வாங்காமலேயே சில பயணிகள் இறங்கிப் போய் விடுகிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டி ஆங்காங்கே பஸ் கண்டக்டர்களை நியமித்து, அங்கேயே அவர்களுக்கு டிக்கெட் வழங்கி விட்டால் பஸ்ஸில் ஏறியவுடன் டிக்கெட் வாங்குவதில் இந்தப் பிரச்சினை இருக்காது. இதைத் தீர்க்க, பஸ் ஸ்டாப்புகளிலேயே டிக்கெட் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.